எம்.சி.ஓபி.எண் : 5603/2016 தேதி: 05/07/2024

மசா : 2

பெயர் : டாக்டர். சேரன்

த/பெயர் : மதியழகன்

வயது : 42

**மனுதாரர் தரப்பில் சாட்சி 2ன் முதல் விசாரணை**

நான் தற்பொழுது ராஜுீவ் காந்தி அரசு மருத்துவமனையில் எலும்பு அறுவை சிகிச்சை பிரிவில் உதவி பேரராசிரியராக பணிபுரிகிறேன். மனுதாரரை நான் பரிசோதனை செய்து சான்று அளித்துள்ளேன். மேற்படி சான்று மசா ஆ12 ஆகும். நேரில் பரிசோதித்தும் ஆவணங்களை சரிபார்த்தும் தான் நான் மேற்படி சான்று அளித்தேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் மருத்துவர் என்று காட்டக்கூடிய அடையாள அட்டை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது பரிசோதனையில் மனுதாரருக்கு செய்தவருக்கு வலதுகையில் டிகுளோவின் இன்சுரி மற்றும் எலும்பு முறிவு சதை இழப்பு ஆகியவை இருந்தது. கே.கே. நகரில் நாங்கள் மருத்துவர் தான் பரிசோதிப்போம் அதில் ஏதேனும் அவசர தேவை என்றால் வட்டார மருத்துவக்குழுவிற்கு பரிந்துரைப்போம். அங்கு மருத்துவக்குழு மேற்படி நபரின் இயலாமை சான்றை கணிக்கும் என்பது தான் வழக்கம். வேறு மருத்துவக்குழு பரிசோதனை செய்தால் 5 முதல் 10 சதவீதம் மட்டும் தான் வேறுபட வாய்ப்புள்ளது. மனுதாரரை எனது தனியார் பரிசோதனை செய்யும் இடத்தில் பரிசோதனை செய்யப்பட்டதா அல்லது அரசு மருத்துவமனையில் செய்யப்பட்டதா என்றால் அரசு மருத்துவமனையில் தான் செய்யப்பட்டது. மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களின் தாக்கத்தால் அவருக்கு அவரது பணிகளை செய்ய இயலுமா என்றால் சிரமப்பட்டு தான் செய்ய இயலும். மனுதாரருக்கு ஏற்பட்டுள்ளது சொற்ப காயம் தான் என்றாலும் நான்

அதிகபடியான இயலாமை சதவீதம் கண்டு சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.